# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 05.07.2018

## உலக நிகழ்வுகள்

- உலகிலேயே முதன் முதலாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேலாண்மையை இலக்காகக் கொண்ட **சர்வதேச மொபிலிட்டி உச்சி மாநாடு** இந்தியாவில் நடைபெற உள்ளது.
  - வாகனங்களை மின்மயமாக்கும் அரசின் இலக்கை நிறைவேற்றவும், புதுபிக்கத்தக்க ஆற்றல் மூலங்களை ஒருங்கிணைக்கவும், **'குளோபல் மொபிலிட்டி சமிட்'** என்ற உச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- **ZKZM-500** என்ற அதிநவீன லேசர் துப்பாக்கியை சீனா ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- உலக வல்லரசு நாடுகளுக்கிடையேயான, **அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம்** தொடர்பான ஆலோசனை கூட்டம் **வியன்னாவில்** ஜுலை 6 அன்று நடைபெற உள்ளது.
  - அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து தற்போது அமெரிக்கா விலகியுள்ளது.

  **தெரிந்து கொள்க**
  - அணு ஆயுதக் குறைப்பு தீர்மானத்தை **இந்தியா ஐ.நா சபையில்** கொண்டு வந்த ஆண்டு – **1956**
  - அணு ஆயுத தடை ஒப்பந்தம் உருவான ஆண்டு – 1963

**இந்திய நிகழ்வுகள்**

- திரிபுரா மாநிலம், அகர்தலா விமான நிலையத்தின் பெயரை மகாராஜா பீர் பிக்ராம் மணிக்யா கிஷோர் விமான நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்ய உள்ளது.
  **தெரிந்து கொள்க:**
  - திரிபுரா மாநிலத்தின் தலைவர் - அகர்தலா
  - தற்போதைய முதல்வர் - பிப்லாப் குமார் தேவ்

- உத்தரகாண்ட் மாநிலத்தில் ஜுன் 30 முதல் பாலித்தின் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.
  **தெரிந்து கொள்க**
  - உத்தரகாண்ட் மாநிலத்தின் தலைநகரம் - டேராடூன்
    தற்போதைய முதல்வர் - திரிவேந்தர சிங் ராவத்

- கர்நாடக இசைமேதை எம்.எஸ் வசந்தகுமாரியின் 90-வது பிறந்த நாளை முன்னிட்டு நினைவு அஞ்சல் தலையை இந்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் சென்னையில் வெளியிட்டுள்ளார்.

**விருதுகள்**

- அமெரிக்காவின் NBA அகாடமி ஆதரவுடன் நொய்டாவில் நடைபெற்ற எல்லைகளற்ற ஆசிய கூடைபந்து பயிற்சி முகாமில் (Basket without Borders Asia Cup) சிறந்த மதிப்புமிக்க வீரர் வீராங்கனைகளுக்கு விருது வழங்கப்பட்டது.
  - (Most Valuable Player) சிறந்த மதிப்புமிக்க வீராங்கனை விருதை இந்தியாவின் சஞ்சனா ரமேஷ் பெற்றுள்ளார்.
  - சிறந்த மதிப்புமிக்க வீரர் விருதை பிலிப்பைன்ஸ் நாட்டின் Rense Forthsey Padrigao பெற்றுள்ளார்.
  - உறுதியான மகளிருக்கான விருதினை உத்திரப் பிரதேசத்தை சேர்ந்த வைஷ்ணவி பெற்றுள்ளார்.

- துபாய் நகரில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திய இந்தியச் சிறுவன் ஃபயஸ் முகமதுக்கு, நகரின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தூதர் என்ற கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- இந்திய விளையாட்டு ஆணையம் தனது பெயரை, சாய் ஸ்போர்ட்ஸ் இந்தியா(SSI) என்பதை ஸ்போர்ட்ஸ் இந்தியா (Sports India) என பெயர் மாற்றம் செய்துள்ளது.

## தமிழக நிகழ்வுகள்

- காஞ்சிபுரம் மாவட்டம் உத்திர மேரூர் பகுதியில் பல்லவ மன்னர் கம்ப வர்மர் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
    - இக்கல்வெட்டானது கி.பி. 894 காலத்தைச் சேர்ந்தது. இது சங்கரபாடியார் என்றழைக்கப்படும் எண்ணெய் வணிக சமூகத்தினர் வாழ்ந்து வந்ததைக் குறிக்கின்றது.

We Shine Academy™